

பாளையில் தமிழ்ப்புலிகள் அமைப்பு சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பேசினார்.

தினகரன் - 21-8-2011

# இந்தியாவில் 8 மாநிலங்களில் மரண தண்டனை ரத்து

## வைகோ பேச்சு

நெல்லை, ஆக. 21: இந்தியாவில் 8 மாநிலங்களில் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுவிட்டது என பாளையில் நடந்த பொதுக் கூட்டத்தில் வைகோ கூறினார்.

பாளை நேருஜீ கலையரங்கில் தமிழ்ப்புலிகள் அமைப்பின் சார்பில் ஒண்டிவீரன் நினைவு நாள் விழா நடந்தது. விழாவுக்கு அமைப்பின் பொதுச்செயலாளர் திருவள்ளுவன் தலைமை வகித்தார். மையக்குழு உறுப்பினர்கள் மாயா, அருந்தமிழரசு, தலைமை நிலைய செயலாளர் சிறுத்தை செல்வன், தென்மண்டல செயலாளர் கலைவேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நெல்லை மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன் வரவேற்றார்.

இதில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பேசியதாவது: புலிகள் இருக்கும் இடத்தில் நான் இருப்பேன். விடுதலை போராட்ட காலத்தில் சாதி அமைப்பு பலமாக இருந்தது. ஆனாலும், அனைத்து சமூகத்தாரும் ஆங்கிலேயருக்கு எதிராக போராடினர். உழைப்பை சுரண்டும் கள்வர்களின் நட்பும்,உழைப்பின் விளைச்சலை பதுக்கும் எலி நட்பும் கூடாது. கடுமையான பசியிலும் இடப்புறம் வீழ்ந்த காட்டுப்பன்றியை உண்ணாமல் யானையை வலப்புறமாக வீழ்த்தி உண்ட புலியின் நட்பு வேண்டும்.

தேசப்பாதுகாப்பு சட்டத்தில் கைதான தமிழ்ப்புலிகள் அமைப்பினர் மூவரை விடுதலை செய்யவேண்டும். அதே போல் பேரறிவாளன் உட்பட மூவருக்கும் மரண தண்டனை ரத்து செய்யப்படவேண்டும். பாளை சிறையில் இருந்த கட்டப்பொம்மன் வாரிசு குருசாமியின் மரண தண்டனை ஜனாதிபதி கருணை மனுவை நிராகரித்த பின்னும் ரத்து செய்யப்பட்டது.

தமிழகத்தில் 17 ஆண்டுகளாக மரண தண்டனை இல்லை. இந்தியாவில் 8 மாநிலங்களில் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுவிட்டது. தமிழக முதல்வரும் மரண தண்டனை நீங்க வழிகாட்டவேண்டும். தமிழ் உலகம் அவர் பின்னால் நிற்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட தமிழ்தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகு, தமிழ்ப்புலிகள் அமைப்பின் மாவட்ட செயலாளர்கள் தாசு, முத்துக்குமார், சிவக்குமார், தலித்ராயன், பெரியார் மணி, முகமது அலி, சிவத்தம்பி, பிரபாகரன், தமிழ்வேந்தன், ஈழ முத்துக்குமார், அறிவரசு, தமிழ்மணி உட்பட பலர் பேசினர். நெல்லை மாவட்ட துணைச் செயலாளர் தமிழரசு நன்றி கூறினார்.

தினகரன் - 21-8-2011



தினமணி - 21-8-2011

ஒண்டிவீரன் நினைவுத் தூணுக்கு அஞ்சலி செலுத்தும் பேரவை துணைத் தலைவர் தனபால், அமைச்சர் செந்தூர்பாண்டியன்.

### வாசுதேவநல்லூர் அருகே

# ஒண்டிவீரன் நினைவுத் தூணுக்கு மலர்தூவி அஞ்சலி

சங்கரன்கோவில், ஆக. 20: வாசுதேவநல்லூர் அருகே ஒண்டிவீரன் நினைவுத் தூணுக்கு அரசு சார்பில் பேரவை துணைத் தலைவர் தனபால், அமைச்சர் செந்தூர்பாண்டியன் ஆகியோர் சனிக்கிழமை மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.


வாசுதேவநல்லூர் அருகேயுள்ள பச்சேரி கிராமத்தில் ஒண்டிவீரன் நினைவுத் தூண் உள்ளது. ஒண்டிவீரன் நினைவு நாளான சனிக்கிழமை அத் தூணுக்கு தமிழக அரசு சார்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில், எம்எல்ஏக்கள் துரையப்பா (வாசுதேவநல்லூர்), பி.ஜி. ராஜேந்திரன் (ஆலங்குளம்), ஒன்றிய அதிமுக செயலர்கள் ராமசாமிப்பாண்டியன், மூர்த்திப்பாண்டியன், திருநெல்வேலி மாவட்ட எம்ஜிஆர் மன்ற இளைஞரணிச் செயலர் வெங்கடேசன், வாசுதேவநல்லூர் தொகுதிச் செயலர் துரைப்பாண்டியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமணி
21-8-2011

தினத்தந்தி - 21-8-2011

தினத்தந்தி



பாளையங்கோட்டையில் நேற்று நடந்த பொதுக்கூட்டத்தில் வைகோ பேசியபோது எடுத்தபடம்.

### பேரறிவாளன், சாந்தன், முருகன்

# 3 தமிழர்களின் உயிரை காப்பாற்றுங்கள்

## பாளை. பொதுக்கூட்டத்தில் வைகோ உருக்கம்

நெல்லை, ஆக.21- பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 தமிழர்களின் உயிரை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாளையங்கோட்டையில் நேற்று நடந்த பொதுக்கூட்டத்தில் வைகோ உருக்கமாக பேசினார்.

### பொதுக்கூட்டம்

பாளையங்கோட்டை நேருஜி கலையரங்க மைதானத்தில் தமிழ்ப்புலிகள் அமைப்பு சார்பில் சுதந்திர போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு நாள் பொதுக்கூட்டம் நேற்று இரவு நடைபெற்றது. பொதுச் செயலாளர் நாகை.திருவள்ளுவன் தலைமை தாங்கினார்.

நெல்லை மாவட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன் வரவேற்று பேசினார். துணை பொதுச் செயலாளர் பேரறிவாளன், தமிழர் தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகு ஆகியோர் பேசினர்.

### வைகோ பேச்சு

கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

நெற்கட்டும்செவலை தலைமை இடமாக கொண்டு ஆட்சி செய்த பூலித்தேவன் ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார். அவருடைய படையில் மாவீரன் ஒண்டிவீரன் முக்கியமான வீரனாக செயல்பட்டார். ஆங்கில படையிடம், பூலித்தேவன் விட்ட சவாலை நிறைவேற்றிக்காட்டினார். தன்னந்தனியாக சென்று ஆங்கிலேய படையை கதிகலங்க செய்தார்.

இடையில் வந்த வர்ணாஸ்ரமத்தாலும், ஜாதிய ஆதிக்கத்தாலும் அவருடைய வரலாறு மறைக்கப்பட்டு இருக்கிறது.

### தூக்குதண்டனை ரத்து

கட்டபொம்மனின் வாரிசு குருசாமியின் தூக்குதண்டனையை போராடி ரத்து செய்தோம். அப்பாவிகளான பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேரின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும். இந்தியாவில் கடந்த 17 ஆண்டுகளாக எவரும் தூக்கில் போடப்படவில்லை. மாநில அரசு தூக்கு தண்டனையை ரத்து செய்ய அரசியல் சட்டம், குற்றவியல் சட்டத்தில் வழி இருக்கிறது.

அமெரிக்கா நாட்டில் 8 மாகாணங்களில் மரண தண்டனை கிடையாது. அதே போல் தமிழ்நாட்டில் முதல்-அமைச்சர் ஜெயலலிதா மரண தண்டனையை ரத்து செய்து இந்தியாவுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். உங்களிடம் மன்றாடி கேட்டுக் கொள்கிறோம், 3 தமிழர்களின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். 3 தமிழர்களின் உயிரை காப்பாற்றுங்கள். அப்படி செய்தால் இந்த தமிழ் சமுதாயம் முதல்-அமைச்சர் ஜெயலலிதா பின்னால் நிற்கும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேசினார்.

### கலந்து கொண்டவர்கள்

கூட்டத்தில் ம.தி.மு.க. நெல்லை மாநகர மாவட்ட செயலாளர் பெருமாள், புறநகர் மாவட்ட செயலாளர் ப.ஆ.சரவணன், சட்டத்துறை நிர்வாகி சுப்புரத்தினம், இலக்கிய அணி சுதர்சன், ஆட்டோ பாலு, மீனவர் அணி அகஸ்டின், தமிழ்ப்புலிகள் அமைப்பு நிர்வாகிகள் மாயா, அருந்தமிழரசு, சிறுத்தை செல்வன், கலைவேந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பாளையங்கோட்டையில் நேற்று நடந்த பொதுக்கூட்டத்தில் வைகோ பேசிய போது எடுத்தபடம்.

### பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின்

# தூக்கு தண்டனையை ரத்து செய்து உயிரை காப்பாற்ற வேண்டும்

## வைகோ உருக்கமான பேச்சு

நெல்லை, ஆக.21–

பாளை நேருஜி கலை அரங்க மைதானத்தில் தமிழ்ப்புலிகள் அமைப்பு சார்பில் சுதந்திர போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு நாள் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கூறியதாவது:–

**புலித்தேவன்**

நெற்கட்டும்செவலை தலைமையிடமாககொண்டு ஆட்சி செய்த பூலித்தேவன் ஆங்கிலேயர்களுக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்தார். அவருடைய படையில் மாவீரன் ஒண்டி வீரன் முக்கியமான வீரனாக செயல்பட்டார். ஆங்கில படையிடம், பூலித்தேவன் விட்ட சவாலை நிறைவேற்றிக்காட்டினார். தன்னந்தனியாக சென்று ஆங்கிலேய படையை கதிகலங்க செய்தார்.

இடையில்வந்தவர்களால் ரமறந்ததாலும்,ஜாதிய ஆதிக்கத்தாலும் அவருடைய வரலாறு மறைக்கப்பட்டு இருக்கிறது.

**கட்டபொம்மன் வாரிசு**

கட்டபொம்மனின் வாரிசு குருசாமியின் தூக்கு தண்டனையை போராடி ரத்து செய்தோம். அப்பாவிகளான பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேரின் தூக்கு தண்டனையைரத்துசெய்ய வேண்டும். இந்தியாவில் கடந்த 17 ஆண்டுகளாக எவரும் தூக்கில் போடப் படவில்லை. மாநில அரசு தூக்கு தண்டனையை ரத்து செய்ய அரசியல் சட்டம், குற்றவியல் சட்டத்தில் வழி இருக்கிறது.

அமெரிக்கா நாட்டில் 8 மாகாணங்களில் மரண தண்டனை கிடையாது. அதே போல் தமிழ்நாட்டில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா மரண தண்டனையை ரத்து செய்து இந்தியாவுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். உங்களிடம் மன்றாடி கேட்டுக் கொள்கிறோம். 3 தமிழர்களின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். 3 தமிழர்களின் உயிரை காப்பாற்றுங்கள். அப்படிசெய்தால்இந்ததமிழ் சமுதாயம்முதல்–அமைச்சர் ஜெயலலிதா பின்னால் நிற்கும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேசினார்.